DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சிவசந்திரன் |
| Father's Name | சின்னராஜ் |
| Village | திருப்பத்தூர் |
| Taluk | திருப்பத்தூர் |
| Calling | டீக்கடை, விவசாயம் |
| Age | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of

**18.08.2025**

**O.S. No.91/2017 பி.வா.சா.1**

**குறுக்கு விசாரணை:-**

1. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியான திருப்பத்தூரில் எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் கடந்த 8 வருடங்களாக வசித்து வருகிறேன். மேற்படி முகவரியில் உள்ள வீடு யாருக்கு சொந்தமானது என்றால் என்னுடைய அம்மாவிற்கு சொந்தமானது. தற்போது மேற்படி முகவரியில் யார் யார் வசித்து வருகிறோம் என்றால் நானும் எனது தங்கையும் வசித்து வருகிறோம். வாதிகள் எனக்கு எதிராக இந்த வழக்கு எதற்காக போட்டிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியான ஏ.சி.லட்சுமிகாந்தன் சார்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு சொத்தின் மூல உரிமையாளரான லோகலட்சுமி என்பவருக்கு எதிராக அ.வ.எண்.83/2016 என்ற ஒரு வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.(சாட்சியிடம் வாதி தரப்பு வழக்கறிஞர் கேள்வியை மீண்டும் புரியும்படி விளக்கி சொன்ன பின்னர் மேற்படி விவரம் தெரியும் என்று சாட்சி பதில் கூறினார்.)

3. மேற்படி சார்பு நீதிமன்ற வழக்கிற்கு பின்னிட்டு தான் என் மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்திற்கு நான் உரிமையாளர் என்பதற்கு ஏதேனும் ஆவணமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்திருக்கிறேன், பட்டா வழங்க விண்ணப்பித்துள்ள மனுவின் நகலை தாக்கல் செய்துள்ளேன். இதுநாள் வரை வழக்கு சொத்து சம்மந்தமாக பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து சம்மந்தமான என் பெயரில் உள்ள வரி ரசீது அல்லது பிற ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, சொத்து ஆவணம் மட்டும் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி என்ன சொத்து ஆவணம் என்றால் லோகலட்சுமியிடம் இருந்து பெறப்பட்ட கிரைய ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன்.

5. மேற்படி லோகலட்சுமி என்பவர் எனக்கு எந்தவொரு கிரையமும் செய்து தரவில்லை என்றால் சரிதான், லோகலட்சுமி என்பர் நேரடியாக கிரையம் செய்து தரவில்லை, அவரது வளர்ப்பு மகளுக்கு அவர் கொடுத்தார், பின்பு அவரது வளர்ப்பு மகளிடம் இருந்து பவர் ஏஜென்ட் மூலம் நான் அதை கிரையம் பெற்றேன். மேற்படி லோகலட்சுமி என்பவருக்கு குழந்தைகள் ஏதும் பிறக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி லோகலட்சுமியின் வளர்ப்பு மகள் என்பதற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் இருக்கிறது.

6. மேற்படி லோகலட்சுமி என்பவர் படித்தவர், கையொப்பம் செய்பவர் என்றால் சரிதான். மேற்படி பவர் ஏஜென்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்திருக்கிறேன். மேற்படி பவர் ஏஜென்ட் பத்திரத்தில் லோகலட்சுமியின் கையொப்பம் இருந்ததா என்றால் கையொப்பம் இல்லை, கைநாட்டு தான் இருந்தது. மேற்படி லோகலட்சுமி என்பவர் படித்தவர், கையொப்பம் செய்யக்கூடியவர் என்றாலும் அப்படி இருந்தும் அவரிடம் ஏன் கைநாட்டு பெறப்பட்டது என்றால் அப்போது அவருக்கு உடல்நிலை சரியில்லை. மேற்படி கைநாட்டு பெற்றதற்கு ஆவணத்தில் அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றோ வேறு விவரத்தை குறிப்பிட்டப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை.

7. மேற்படி வாதிக்கு வழக்கு சொத்து சம்மந்தமாக கிரைய ஒப்பந்ததத்தில் லோகலட்சுமி கையொப்பம் செய்து இருக்கிறார் என்றால் சரியல்ல. லோகலட்சுமியிடம் இருந்து வாதி கிரையம் ஒப்பந்தம் பெற்றிருக்கிறார் என்று லோகலட்சுமியே ஒப்புக்கொண்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண் சம்மந்தமாக தபால் மூலம் தெரியவந்தது. நான்

கூறிய பவர் ஏஜென்ட் மூலம் பெறப்பட்ட கிரையப்பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், பதிவு செய்யாமல் திருப்பப்பட்டது என்றாலும் சரியல்ல, பதிவு செய்யப்பட்டுவிட்டது.

8. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், இரண்டு சர்வே எண்கள்– 16/2, 4/1 ஆகும். வழக்கு சொத்தில் மேலும் ஒரு சர்வே எண்ணான 6/2ம் போடப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| ***ESHWAR VISWANATHAN*** | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**